## தமிழ்நாடு செவிலியர் மற்றும் மகப்பேறு செவிலியர் அவையத்தின் நூற்றாண்டுத் தொடக்க விழா

# பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும், தாய்முகம் பார்க்கும் முன் உங்களின் முகத்தைத்தான் பார்க்கிறார்கள்!

## சென்னையில் நடைபெற்ற செவிலியர்கள் சங்க நூற்றாண்டு விழாவில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நெகிழ்ச்சி!

சென்னை,ஜூலை.29

**சென்னையில், தமிழ்நாடு நர்சிங் மற்றும் மிட்வைவ்ஸ் கவுன்சில் நூற்றாண்டு விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு, சிறப்பாகப் பணிபுரிந்த செவிலியர்களுக்கு விருதுகளை வழங்கிப் பாராட்டிப் பேசினார்.**

**அப்போது அவர், `கிராமப்புற சுகாதார கட்டமைப்பின் அடித்தளமாக இருப்பது முதல், பெருந்தொற்று – பேரிடர் மற்றும் போர் காலங்கள் அனைத்திலும் மனித குலத்தைக் காக்கும் முன்கள வீரர்களாக சேவையில் ஈடுபடும் செவிலியர்கள் என்றும் போற்றுதலுக்குரியவர்கள்" என்று குறிப்பிட்டார்.**

**விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

தமிழ்நாடு நர்சிங் மற்றும் மிட்வைவ்ஸ் கவுன்சிலின் நூற்றாண்டு விழா மற்றும் விருதுகள் வழங்குகின்ற நிகழ்ச்சியில் பங்கேற்று உங்களுடன் உரையாடுவதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

முதலில் உங்கள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் ராஜமூர்த்தி அவர்களுக்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும், அன்பையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சங்கத்தைப் பொறுத்தவரைக்கும் உங்களுக்கு அவர் தலைவர். பல பேருக்கும் தெரியும், சில பேருக்குத் தெரியாது. எனக்கு அவர் சொந்த தாய்மாமா. என்னைத் தூக்கி வளர்த்தவர் அவர். இந்த நிலைமையில், நான் இங்கு நிற்பதற்கு மிக மிக முக்கியமான காரணம் ராஜமூர்த்தி அவர்கள்.

### தன்னம்பிக்கை – பாதுகாப்பு

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இந்த வாய்ப்பை எனக்கு அளித்தமைக்கு ராஜமூர்த்தி மாமா அவர்களுக்கும், உங்கள் துறையின் அமைச்சர் அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு வருகை தந்துள்ள ஒவ்வொரு செவிலியரின் முகத்தையும் பார்க்கும்போது மிகப்பெரிய அளவில் தன்னம்பிக்கை உணர்வும், பாதுகாப்பு உணர்வும் எனக்கு ஏற்படுகிறது. ஏனென்றால், உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும், தன் சொந்த தாயின் முகத்தைப் பார்ப்பதற்கு முன்பு, இங்கு வந்திருக்கின்ற செவிலியர்களாகிய உங்களின் முகத்தைத்தான் அவர்கள் பார்க்கிறார்கள்.

அப்படிப்பட்ட உங்களை சந்திப்பதில் மிகுந்த பெருமை அடைகிறேன். கடந்த ஒரு வார காலமாக நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அந்த ஒரு வாரமாக நான் தமிழ்நாட்டின் எந்த இடத்திற்குச் சென்றாலும், மக்கள் என்னைப் பார்த்து முதலில் கேட்பது, முதலமைச்சர் எப்படி இருக்கிறார் என்பதுதான். நான் அவர்களிடம் தலைவர் நன்றாக இருக்கிறார். இன்னும் இரண்டு, மூன்று நாட்களில் வீட்டிற்கு வந்து விடுவார் என்று நம்பிக்கையோடு சொன்னேன். நேற்று நம் முதலமைச்சர் அவர்கள் நலமாக வீடு திரும்பி இருக்கிறார்கள். அதற்கு இந்த நேரத்தில், அவருக்கு உற்றத் துணையாக இருந்த மருத்துவர்களுக்கும், உங்களைப்போன்ற செவிலியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



### 100 ஆண்டுகள்

தமிழ்நாடு நர்சிங் மற்றும் மிட்வைவ்ஸ் சங்கம் இன்றைக்கு 100 ஆண்டுகளைக் கடந்துள்ளது. அரசியல் சார்பற்ற ஒரு கவுன்சிலை ஓர் ஆண்டு நடத்துவதே மிகவும் சிரமம். ஆனால், நீங்கள் 100 ஆண்டுகளைக் கடந்து இருக்கிறீர்கள். அதற்கு எனது மனமார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சங்கத்திற்கும் நம் திராவிட இயக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஏனென்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னோடி இயக்கமான `நீதிக்கட்சி' ஆட்சிக் காலத்தில்தான், அதாவது, 1924-ஆம் ஆண்டில் `மெட்ராஸ் நர்சஸ் அண்டு மிட்வைவ்ஸ்' கொண்டுவரப்பட்டு, அது சட்டமாக்கப்பட்டது. நீதிக்கட்சி நிறைவேற்றிய அந்தச் சட்டம்தான், இந்தியாவிலேயே முதன்முறையாக செவிலியர் பணிக்குச் சட்டபூர்வமான ஒழுங்குமுறையை வழங்கியது. இந்த கவுன்சில்தான் இந்தியாவில் மட்டுமல்ல, தென்கிழக்கு ஆசியாவிலேயே செவிலியர்களுக்காக உருவாக்கப்பட்ட முதல் கவுன்சில் என்ற பெருமைக்குரியது.

### இந்தியாவிற்கே பெருமை

உலகிலேயே மூன்றாவதாக, நூற்றாண்டு காண்கின்ற செவிலியர் கவுன்சில் என்ற பெருமை, நம் தமிழ்நாடு நர்சஸ் கவுன்சிலுக்கு உண்டு. எனவே, இந்த கவுன்சில் என்பது தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, நம் இந்தியாவிற்கே மிகப்பெரிய பெருமையாகத் திகழ்கிறது.

நோய்கள் பரவாமல் இருக்க, தடுப்பூசி மிக மிக அவசியம். ஆனால், ஒரு காலத்தில் தடுப்பூசி போடச் சென்றால், மருத்துவர்களையும், செவிலியர்களையும் கண்டு மக்கள் ஓடி ஒளிந்துகொள்ள அவர்களைத் தேடிப் போய் துரத்திய காலம் இருந்தது. அப்படிப்பட்ட மக்களுடன் பக்குவமாகப் பேசி, அவர்களுக்குப் புரிய வைத்து, தடுப்பூசி போட்டு பல நோய்கள் பரவாமல் தடுத்த பெருமை, இங்கு கூடி இருக்கின்ற செவிலியர் சமூகத்திற்குத்தான் உண்டு.

திராவிட இயக்கமும் அப்படித்தான். சமூகத்தில் பிடித்த நோய்களைத் தீர்ப்பதற்காக தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் போன்றோர் பகுத்தறிவுக் கருத்துகளை, ஊர் ஊராகச் சென்று சொன்னார்கள். ஆரம்பத்தில் மக்கள் அவர்களை எதிர்த்து, தடுத்து, தாக்கினார்கள். ஆனால், அவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டு, அந்தத் தலைவர்கள் தொண்டாற்றிய காரணத்தால்தான், இன்றைக்கு நம் தமிழ்ச் சமூகம் இந்த அளவிற்கு முன்னேறியிருக்கிறது என்பதை நீங்கள் உணர வேண்டும். பல நோய்கள் பரவி தமிழ்நாட்டை உலுக்கிய நிலையில், அவற்றையெல்லாம் முன்களப் பணியாளர்களாக நின்று, தடுத்தது செவிலியர் சமூகத்தைச் சேர்ந்த நீங்கள்தான்.

### இன்னுயிரைத் தந்திருக்கிறார்கள்

குறிப்பாக, கொரோனா காலத்தில் நீங்கள் ஆற்றிய பணிகளை எந்த காலத்திலும், யாராலும் மறுக்கவும், மறைக்கவும் முடியாது. பல செவிலியர்கள் வீட்டைவிட்டு, குழந்தைகளை விட்டு, பெற்றோர்களைக்கூட சந்திக்காமல் இரவு, பகல் பார்க்காமல் பணி செய்தீர்கள். இன்னும் சொல்லப் போனால், ஒரு சில செவிலியர்கள் கொரோனாவிற்கு எதிரான போரில் இன்னுயிரைத் தந்திருக்கிறார்கள்.

இந்த கவுன்சில் உருவாகக் காரணமான இச்சட்டத்தை சட்டமன்றத்தில் நிறைவேற்றும்போது அங்கு உறுப்பினராக இருந்த டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் அவர்கள் சொன்ன வார்த்தை இது. ``*Trained nurses are the cornerstone of modern public health*" என்று செவிலியர் பணியைப் பற்றி அழகாகச் சொல்லியிருக்கிறார். அதாவது பயிற்சி பெற்ற செவிலியர்கள்தான் நவீன பொது சுகாதாரத்தின் ஆதாரம் என்று சொன்னார். அந்த முத்துலட்சுமி அம்மையாரின் பெயரில்தான் கருவுற்ற தாய்மார்களுக்கு சத்துணவும், நிதியுதவியும் வழங்கக் கூடிய திட்டத்தை, நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1989-ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்கள்.

200 ரூபாய் நிதி உதவியுடன் தொடங்கப்பட்ட அந்தத் திட்டம்தான், இன்றைக்கு 18 ஆயிரம் ரூபாய் நிதி உதவியாக வளர்ந்து, தமிழ்நாட்டில் நடக்கின்ற பிரசவங்கள் எல்லாம் மருத்துவமனையில்தான் நடக்கின்றன. பிரசவத்தின் போது தாய்-சேய் இறப்பு விகிதத்தைப் பெருமளவு குறைத்து, இன்றைக்கு இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக நம் தமிழ்நாடு விளங்கிக்கொண்டு இருக்கிறது. அதற்கு இந்த நேரத்தில் எனது பாராட்டுகளையும், வாழ்த்து களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வெற்றிக்குக் காரணம் உங்களின் பங்களிப்புதான்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.7.2025) வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற தமிழ்நாடு செவிலியர் மற்றும் மகப்பேறு செவிலியர் அவையத்தின் நூற்றாண்டுத் தொடக்க விழாவில், 2025 ஆம் ஆண்டுக்கான சிறந்த செவிலியர் மற்றும் வாழ்நாள் சாதனையாளர் விருதுகளை வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, மரு. நா. எழிலன், நிலைக் குழுத் தலைவர் (பணிகள்) நே. சிற்றரசு, முனைவர் ப.செந்தில்குமார், மரு. அருண் தம்புராஜ், டாக்டர் ஜெ.ராஜமூர்த்தி, மரு. தேரணிராஜன், முனைவர் எஸ்.அனி கிரேஸ் கலைமதி, முனைவர் அனி ராஜா மற்றும் செவிலியர்கள் உடனிருந்தனர்.

### திட்டங்களும் கட்டமைப்புகளும்

எல்லா மனித உயிர்களையும் சமமாகக் கருதக்கூடிய பணி என்றால், அது மருத்துவர்களும், செவிலியர்களும் செய்யும் பணிதான். தமிழ்நாட்டில் இந்த கவுன்சில் மொத்தம் இரண்டரை லட்சத்திற்கும் மேற்பட்ட செவிலியர்கள் பதிவு செய்துள்ளதாக, இங்கே கூறினார்கள். செவிலியர்கள் எண்ணிக்கை தமிழ்நாட்டில் இவ்வளவு அதிகரித்திருப்பதற்கு தி.மு.க. ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட திட்டங்களும், உருவாக்கப்பட்ட சுகாதாரக் கட்டமைப்புகளும்தான் மிக முக்கியமான காரணம் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

தமிழ்நாட்டில் இன்றைக்கு கிராமப்புற சுகாதாரக் கட்டமைப்புகள் சிறப்பாக இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட திட்டங்கள்தான். அவரின் ஆட்சிக் காலத்தில்தான் கிராமங்கள்தோறும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்டார மருத்துவமனைகள் எல்லாம் உருவாக்கப்பட்டன. அதேபோல், மாவட்ட மருத்துவமனைகளில் இரத்த வங்கி கொண்டுவரப்பட்டதும் கலைஞரின் ஆட்சிகாலத்தில்தான்.

நவீன சிகிச்சைக் கருவிகள், ஸ்கேன் கருவிகள் என்று மருத்துவமனைகளை நவீனமயமாக்கியது கலைஞரின் ஆட்சிக் காலத்தில்தான். கலைஞர் அவர்கள் சுகாதாரம், மருத்துவக் கட்டமைப்பின் மீது எந்த அளவிற்கு அக்கறையோடு இருந்தார் என்பதற்கு, இங்கு ஒரேயொரு உதாரணத்தைக் கூற விரும்புகிறேன்.

### கோபாலபுரம் இல்லம்

கலைஞர் அவர்கள் வாழ்ந்த சொந்த வீடு, கோபாலபுரம் வீடு என்பது உங்களுக்குத் தெரியும். இந்தியாவின் அரசியலை, பல ஆண்டுகள் தீர்மானித்த இடம் அந்த கோபாலபுரம் இல்லம்தான். நாங்கள் எல்லாம் பிறந்து, குழந்தையாக இருந்தபோது ஓடி, ஆடி விளையாடிய இல்லம், கோபாலபுரம் இல்லம். அந்த வீட்டை தன் காலத்திற்கு பிறகு, ஒரு மருத்துவமனையாக்க வேண்டும் என்று எழுதி கொடுத்திருக்கிறார், டாக்டர் கலைஞர் அவர்கள்.

இதன் மூலம் மனிதநேயத்தின் உச்சத்திற்கே சென்றவர் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். இன்றைக்கு கலைஞர் வழியில் ஆட்சி நடத்திக்கொண்டு இருக்கின்ற முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் சுகாதாரக் கட்டமைப்புகளை வலுப்படுத்தி, மக்களைத்தேடி மருத்துவம் என்கின்ற மிகப்பெரிய திட்டத்தை உங்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்.

நம் திராவிட மாடல் அரசு என்றைக்கும் செவிலியர்களுக்கு பக்கபலமாக நிற்கும். இன்றைக்கு நூற்றாண்டு காண்கின்ற செவிலியர் கவுன்சில் பல ஆண்டுள் செயல்பட்டு, மக்கள் பணியாற்றிட வேண்டும். தமிழ்நாட்டின் சுகாதாரத்தைப் பேணிப் பாதுகாத்திட வேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு, விருதுபெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற வாய்ப்பளித்த உங்கள் அத்தனைபேருக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் மா.சுப்பிரமணியன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, மருத்துவர் எழிலன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் செந்தில் குமார் ஐ.ஏ.எஸ்., தேசிய நலவாழ்வுக் குழும இயக்குநர் அருண் தம்புராஜ் ஐ.ஏ.எஸ்., மருத்துவக் கல்வி இயக்கக இயக்குநர் தேரணிராஜன், தமிழ்நாடு நர்சிங் அண்டு மிட்வைவ்ஸ் கவுன்சில் தலைவர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மருத்துவர் ஜெ.ராஜமூர்த்தி, கவுன்சிலின் பதிவாளர் ஹானி கிரேஸ் கலைமதி, துணைத் தலைவர் ஹானி ராஜா, சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் சிற்றரசு, மா.பா.அன்புதுரை, வினோத், அகஸ்டின் பாபு, நுங்கை வி.எஸ்.ராஜ், வி.பி.மணி, சிட்டிபாபு, பிரகாஷ், தமிழ்நாடு நர்சிங் கல்லூரி சங்க நிர்வாகிகள் விவேகானந்தன், சிதம்பரம் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது இதில் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். உடன் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ப.அப்துல் மாலிக், ஒன்றிய செயலாளர் கூளூர் எம். ராஜேந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண், மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.திராவிடபக்தன், ஆர்.டி.இ.ஆதிசேஷன், ஓ.ஏ.நாகலிங்கம், தொகுதி பார்வையாளர் சண்முகநாதன், உதயமலர் பாண்டியன் சி.ஜெயபாரதி, எஸ்.கே.ஆதாம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி. மோதிலால், டி.எம்.சுகுமார், டி.கே.பாபு, ம.புவனேஷ் குமார், டி.ஆர். திலீபன், ஆர்.ராஜா, உள்பட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் இளைஞர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




சென்னையில் நேற்று (28.07.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் (TANSCHE) சார்பில் உயர்கல்வி உரையாடல்கள் என்னும் கலந்துரையாடல் தொடரின் முதல் நிகழ்வாக "வருங்கால கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் மீது செயற்கை நுண்ணறிவு (AI) ஏற்படுத்தும் தாக்கம் குறித்த கருத்தரங்கினை உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், துறை செயலாளர் பொ.சங்கர் கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் ஜெ. இன்னசென்ட் திவ்யா, மாநில உயர் கல்வி மன்ற துணைத் தலைவர் எம்.பி.விஜயகுமார், (ஓய்வு) மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.